# பொன்னுச்சாமி உண்ணாவிரதம்.

## விளம்பர மந்திரி பேட்டி.

### உண்ணாவிரதியிடம் கிராஸ் கேள்விகள்.

### பொன்னுச்சாமி ஆணித்தரமான பதில்.

### உண்ணாவிரதி முன் பாம்பு.

(நமது நிருபர்)

சென்னை, ஜூன், 2

கட்டாய ஹிந்தியை எதிர்க்கும் பொருட்டு தோழர் பல்லடம் பொன்னுச்சாமி அவர்கள் நேற்று (1-6-38) காலை, முதல் மந்திரி கனம் சி. ராஜகோபாலாச்சாரியின் வீட்டின் முன்பாக உண்ணாவிரதம் தொடங்கி விட்டார். தோழர்கள் ஈழத்துச் சிவானந்த அடிகள், சுவாமி ஷண்முகானந்தர், சுவாமி அருணகிரி நாதர், சுவாமி விமலானந்தா முதலானவர்களைத் தலைமையாகக் கொண்ட ஒரு பெரும் ஊர்வலம் ஹிந்தி எதிர்ப்புத் தலைமை நிலையத்திலிருந்து புறப்பட்டுச் சென்றது. மந்திரி ராஜகோபாலாச்சாரியார் வீட்டையடைந்ததும் சில சொற்பொழிவுகள் நிகழ்ந்தன. போலீஸ்காரர்களும் வந்திருந்தார்கள். எல்லோர் முன்பாகவும் பல்லடம் பொன்னுச்சாமி அவர்கள் உண்ணாவிரதம் தொடங்கி விட்டார். தோழர் பொன்னுச்சாமி அவர்கள் மந்திரியின் வீட்டு வாயிலில் உட்கார்ந்து கொண்டிருக்கிறார். சி. ஐ. டி. களும் போலீஸ் ஜவான்களும் அவருக்கு அருகில் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். பல தோழர்கள் அவரை வந்து பார்த்து விட்டுப் போகிறார்கள்.

### கனம் இராமநாதனின் பேட்டி.

நேற்று மாலை கனம் மந்திரி எஸ். இராமநாதன் அவர்கள் சத்தியாக்கிரகி தோழர் பொன்னுச்சாமியிடம் வந்து பேசினார். அவர் பொன்னுச்சாமியை நோக்கி "நீர் காங்கரஸ்காரரா, சுயமரியாதைக்காரரா?" என்று வினவினார். பொன்னுச்சாமி அவர்கள் "நான் பல ஆண்டுகளாக காங்கரஸ்காரனாக இருந்திருக்கிறேன்" என்று விடையளித்தார். அப்படியானால், "நீர் முதன் மந்திரி வீட்டில் சத்தியாக்கிரகம் ஆரம்பித்திருப்பது காங்கரஸ் கொள்கைக்கு விரோதமல்லவா? என்று கேட்டார். தோழர் எம். பொன்னுசாமி, "தாங்கள் முன்பு கதருக்கு விரோதமாகப் புத்தகம் எழுதிவிட்டு, இப்போது கதர் வேண்டுமென்று சொல்லுகிறீர்களே இது தங்கள் கொள்கைக்கு விரோதமல்லவா? அதுபோல என் மனதுக்கு உண்மையெனத் தோன்றியதை நான் செய்கிறேன். என் தமிழ்த் தாயைக் காப்பாற்ற நான் உண்ணாவிரதமிருக்கிறேன்" என்று பதில் சொன்னார். பிறகு இராமநாதன் அவர்கள், "இந்த உண்ணாவிரதத்தை யாராவது செய்யச் சொன்னார்களா அல்லது நீங்களே சொந்த அபிப்பிராயமாகச் செய்கிறீர்களா" என்று கேட்டார். பொன்னுச்சாமி "என் சொந்த கருத்துப்படி செய்கிறேன்" என்று விடை சொன்னார். பிறகு கனம் இராமநாதன் இராஜகோபாலாச்சாரியின் வீட்டுக்குள் போய் அவருடைய பிள்ளைகளுடன் பேசிக் கொண்டிருந்து விட்டுப் போய் விட்டார். கனம் இராஜகோபாலாச்சாரியாரின் பிள்ளைகளும் தோழர் பொன்னுசாமியிடம் வந்து தங்கள் வீட்டண்டை இருக்க வேண்டாம் என்றும் வேறு இடத்திற்குப் போய்விடும்படியும் கேட்டுக் கொண்டார்கள். பொன்னுச்சாமி போக முடியாதென்று சொல்லி விட்டார். போலீஸ் அதிகாரிகளும் அவரை வேறு இடத்துக்குப் போகும்படி சொன்னார்களாம். தோழர் பொன்னுச்சாமி போக முடியாதென்றும், வேண்டுமானால் சட்டப்படி என்ன வேண்டுமானாலும் செய்து கொள்

## பொன்னுசாமி உண்ணாவிரதம் இன்றைக்கு 3ம் நாள்.

ளுங்கள் என்றும் சொல்லி விட்டார்.

### பக்கத்தில் பாம்பு.

நேற்று (1-6-38 புதன்கிழமை) இரவு சிறிது மழை தூறிற்று. சத்தியாக்கிரகி பொன்னுச்சாமி அவர்கள் மரத்தடியிலேயே உட்கார்ந்து கொண்டிருந்தார். பக்கத்தில் போலீஸ்காரரும் இருந்தார்கள். ஒரு பாம்பு எங்கிருந்தோ வந்து தோழர் பொன்னுச்சாமியின் காலண்டை படுத்திருந்தது. மழை சந்தடியில் அதை ஒருவரும் கவனிக்கவில்லை. பிறகு தான் கவனிக்கமுடிந்தது. ஆனால், பாம்பு நகர்ந்து போய் விட்டது. இந்தச் செய்தியை (இன்று 2—6—38) காலையில் போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் வந்த போது போலீஸ்காரர் அவருக்குத் தெரிவித்தார். அவர் சரிதான் என்று கேட்டுக் கொண்டு போய் விட்டார். தோழர்கள் மீனாய்பாள், சிவராஜ் ராவ்பகதூர் எம். ராமன் முதலியவர்கள் வந்து பார்த்து விட்டுப் போனார்கள்.

### சுதேச வைத்தியர்கள் கவனிக்க.

கோவில்பட்டி மே 30.

சுதேச வைத்தியர்கள் ரிஜிஸ்டர் செய்யும் காலத்தை சென்னை சர்க்கார் நீடிக்கச்செய்து இப்பொழுது ஆறுமாத காலம் கடந்துவிட்டது ஆதலால் இதுவரை ரிஜிஸ்டர்செய்து கொள்ளாத வைத்தியர்கள் சீக்கிரம் செய்துகொள்ளும்படி அறிவிக்